**STARTING TIME 10.40 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 22/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C.Karthigaiselvam, Senior Bailliff of this court, on 05.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : அன்பு Father's Name : கண்ணன்

Address : எண்.113, அஸ்வரேவந்தரபுரம், எரும்பி காலனி,
பள்ளிப்பட்டு வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

Age : 44

**11 முதல் 16 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் வாதி என் தகப்பனார் என்றால், சரிதான். என் தகப்பனார் இவ்வழக்கை எத்தனை நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், 16 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்காக வேண்டி என் தகப்பனார் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சர்வே எண்கள் 955/2 மற்றும் 957/3 ஆகும். இருசர்வே எண்களின் விஸ்தீரணம் என்னவென்றால், 38 செண்ட் மற்றும் 46 செண்ட் என மொத்தம் 85 செண்ட் ஆகும்.

2. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், அம்மாகண்ணம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அம்மாகண்ணம்மாள் என்பவருக்கு தாவா சொத்துக்கள் எப்படி வந்தது என்றால், எனது அப்பாவழி பாட்டி பாப்பம்மாள் என்பவரின் அக்கா ராதாம்மாள்

என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற வகையில் பாத்தியப்பட்டது ஆகும். அம்மாகண்ணம்மாள் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கி அனுபவித்து வந்தாரா என்றால், ஆமாம்.

3. அம்மாகண்ணம்மாள் உயிருடன் இருந்த போது 12.05.1944 அன்று தாவா சொத்துக்களை முருகன் என்பவருக்கு சுவாதீன அடமானம் செய்தார் என்றால், சரிதான். அந்த அடமானம் பதிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அடமானம் பெற்ற முருகன், அந்த அடமானத்தை 19.02.1951 அன்று பெருமாள் என்பவருக்கு மேலொப்பம் செய்துக் கொடுத்தார் என்றால், சரிதான், ரூ.100–க்கு முருகன் பெற்ற அடமானத்தை பெருமாளுக்கு ரூ.200–க்கு அடமானம் வைத்தார்.

4. 19.02.1951–க்கு பிறகு தாவா சொத்துக்களை பெருமாள் தான் அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல. அவ்வாறு எனில் தாவா சொத்துக்களை யார் அனுபவித்து வருவது என்றால், அம்மாகண்ணம்மாள் என்பவருக்கு பிறகு அவரின் ஒரே மகளான நாகவள்ளியும், நாகவள்ளியின் காலத்திற்கு பிறகு அவரது ஒரே மகளான எஸ்தர் என்பவரும் அனுபவித்து வந்தார்கள். எஸ்தர் என்பவர் அசோகன் என்பவருக்கு விற்பனை செய்த பிறகு அவர் அனுபவித்து வந்து, வரியும் செலுத்தி வந்து, அவர் தாவா சொத்துக்களை எனது தகப்பனாரான வாதிக்கு விற்பனை செய்த பிறகு எனது தகப்பனார் அனுபவித்து வருகிறார்.

5. தாவா சொத்துக்களை இவ்வழக்கின் 3–ம் பிரதிவாதி பெருமாள் என்பவர் 03.10.1986 அன்று 4–ம் பிரதிவாதி வேலு என்பவருக்கு கிரையம் கொடுத்து சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால், அந்த கிரையம் போலி கிரையம் ஆகும். அம்மாகண்ணம்மாளின் மகன் நாகவள்ளி என்பவர், அம்மாகண்ணம்மாள் காலமாகுவதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால், சரிதான். எஸ்தரம்மாளின் மகன்கள் தான் இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால், சரிதான்.

6. அம்மாகண்ணம்மாளின் பேத்தியும், நாகவள்ளி என்பவரின் மகளான எஸ்தரம்மாள் இவ்வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் மீது சோளிங்கர் மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களை குறித்து அசல் வழக்கு எண் 809/1986 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால், சரிதான். அந்த வழக்கில் என்ன பரிகாரம் வழங்கப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியும். அந்த வழக்கு 19.08.1991–ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால், எஸ்தரம்மாளால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாததால் வழக்கு ஒருதலைப்பட்சமாக தள்ளுபடியாகிவிட்டது.

7. அந்த வழக்கின் தீர்ப்பை எதிரத்து எஸ்தரம்மாள் ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 51/1993 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்தார் என்றால், மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் அதுபோல் மேல்முறையீடு செய்ததாக சொல்லியிருந்தால் அது சரியா, தவறா என்றால், தவறு தான்.

சாட்சியின் குறுக்கு விசாரணையின் போது ஒவ்வொரு கேள்விக்கும் வாதி தரப்பு வழக்கறிஞர் இடையூறு செய்துக் கொண்டு வந்ததால், சாட்சியை மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**ENDING TIME 11.15.A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.05 14:28:02 +0530